செ.கு.எண்: 74

20/10/09

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 23.10.2009

# உலக சிக்கன நாள் செய்தி

"உலக சிக்கன நாள்!" சிக்கனத்தின் அவசியத்தை ஒவ்வொருவருக்கும் உணர்த்திட அக்டோபர் 30ஆம் நாள் உலக சிக்கன நாளாக ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்படுகிறது.

"வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து" சிக்கனமாகச் செலவு செய்வோர் வாழ்வு சிறக்கும்; வரும் வருவாயில் ஒரு பகுதியைச் சேமிப்பவர் வாழ்வு செழிக்கும். சேமிப்பு, பாதுகாப்பானதாக அமைய வேண்டும். பல்வேறு இடங்களில், தனியார் அமைப்புகளில் சேமிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுப் பலர் அல்லல்களுக்கு ஆளாகி வருவதைச் செய்தித்தாள்கள் வாயிலாக அறியும் பொழுது நாம் வருந்த நேர்கிறது.

பாடுபட்டுத் தேடிய பணத்தைப் பாதுகாப்பு உணர்வோடு சேமிப்பது தானே முறை. அதற்கு "அஞ்சலகம்", "அரசு வங்கிகள்", "கூட்டுறவு வங்கிகள்" போன்றவை உதவுவதால் அங்குச் சேமிப்பதன்மூலம் சேமிக்கும் தொகைக்குப் பாதுகாப்பு கிடைப்பதுடன் பல்வேறு நன்மைகளும் நமக்குக் கிடைக்கின்றன. சிறுகச் சிறுகச் சேமிக்கும் தொகை பெருந்தொகையாகி அரசுக்குக் கிடைக்கிறது. அந்நிதி அரசின் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றவும் பயன்படுகிறது. இத்தொகைக்காகச் சேமிப்பவர்க்கு அரசு வட்டி வழங்குகிறது. வட்டியுடன் முதலும் சேர்ந்து கூடுதல் தொகை கிடைப்பதால் அத்தொகை சேமிப்பவர்க்குக் குடும்பத்தின் அவசரத் தேவைகளை நிறைவு செய்வதில் பெரிதும் உதவுகிறது. இப்படித் தனி மனிதரின் சேமிப்பு அவருக்குப் பயன் தருவதுடன், அரசின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் துணைபுரிகிறது. இதன்மூலம் சேமிப்பவர் நாட்டு முன்னேற்றத்திலும் பங்கேற்க முடிகிறது.

எனவே, செலவு செய்யும்போது சிந்திப்போம்! சிக்கனமாய்ச் செலவு செய்வோம்! சமுதாயத்தில் சேமிக்கும் உணர்வைக் குழந்தைப் பருவம் முதலே உருவாக்கி வளர்ப்போம்! குடும்பத்தின் நலம் காத்திட – நாட்டின் வளம் பெருக்கிட நாளும் சேமிப்போம் என இந்த உலக சிக்கன நாளில் உறுதியேற்போமாக!

சிக்கனம் கடைப்பிடிப்போம்! சேமிப்போம்! சிறப்பாக வாழ்வோம்!

23/10/2009

(மு. கருணாநிதி)

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9